
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1105

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

101

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# தீண்டாமைக்கு தீ வைத்த நீதிக்கட்சி!

'மதுரை ஜில்லா ஜஸ்டிஸ் மகாநாடு' 12.07.1936 அன்று வாடிப்பட்டியில் நடைபெற்றது. பெரியார், சௌந்தரபாண்டியனார், பி.டி.ராஜன், பட்டுக்கோட்டை அழகிரிசாமி உட்பட சுமார் 3,000 பேர் பங்கேற்ற பிரமாண்ட ஊர்வலத்துடன் மாநாடு தொடங்கியது.

ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை அடைந்தவுடன், வி.வி.ராமசாமி கொடி யேற்றினார். மாநாட்டுக் கொட்டகை நிரம்பி, எஞ்சியோர் அமருவதற்கு ஏதுவாக, இரு பக்கமும் வைக்கப்பட்டிருந்த தட்டிகள் அகற்றப்பட்டன. திண்டுக்கல் மத்திரன் பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது. அவர் பாடப் பாட ஒவ்வொரு நொடிக்கும் மக்கள் உற்சாகமாக ஆரவாரம் எழுப்பினர். மாநாட்டைத் திறந்துவைத்து பேசிய பி.டி.ராஜன், நீதிக்கட்சியின் நிலைமை குறித்தும், அடுத்து வரும் தேர்தல் குறித்தும் பேசினார். வரவேற்புரையாற்றிய சித்தையன் கோட்டை வி.எஸ்.எஸ்.மணி, "ஜஸ்டிஸ் கட்சி (நீதிக்கட்சி) தோன்றிய பிறகுதான், நம் நாட்டில் பார்ப்பனியத்துக்கு சாவுமணி அடிக்க ஆரம்பிக்கப்பட்டது" என நிர்வாகத்திலும் சமூகத்திலும் நிலவிய பார்ப்பனிய மேலாதிக்கத்தை தகர்க்க, நீதிக் கட்சி ஆற்றிய பணிகளைக் குறிப்பிட்டுப் பேசினார்.

தலைமையுரையாற்றிய சௌந்தர பாண்டியனார், "நமது கட்சி கடந்த 19 ஆண்டுகளாக சர்க்காருடன் கிளர்ச்சி செய்து, பலன் அடைந்திருக்கிறோம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை, சர்க்கார் ஓரளவு கையாளும்படி செய்திருக்கிறது. இன்று எல்லா வகுப்பாரிலும் உயர்தரக் கல்வி பெறவும், உயர்ந்த உத்தியோகங்களில் இடம்பெறவும், பொது ஸ்தாபனங்களில் அங்கம் பெறவும், பொது உரிமைகளைப் பெறவும் நம்மால் போராட முடிந்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் என்று கருதப்படும் வகுப்பாருக்கு பொதுப்பள்ளிகளிலும், கிணறுகளிலும், மற்ற பொது ஸ்தாபனங்களிலும் பிரவேசிக்க முடியாமல் இருந்த நிலைமையை நீக்க முடிந்தது'' என்று தீண்டாமைக் கொடுமைகளை ஒழிக்க, நீதிக்கட்சி சமூகத்தில் செலுத்திய தாக்கத்தை எடுத்துக்கூறினார்.

பிறகு, மாநாட்டுக்கு வர இயலாதோர் அனுப்பிய தந்திகள் வாசிக்கப்பட்டன. அதன்பிறகு, மாநாட்டுத் திடலிலேயே வருகை தந்தோர் அனைவருக்கும் சமபந்தி விருந்து அளிக்கப்பட்டது. மீண்டும், பிற்பகல் 2 மணிக்கு மாநாடு கூடியவுடன் பலரும் பாடல்கள் பாடினர். அதன்பிறகு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. குறிப்பாக, விருதுநகரில் நடைபெற்ற ராமநாதபுரம் ஜில்லா மாநாட்டில், பெரியாரால் கொடுக்கப பட்ட ஜஸ்டிஸ் வேலைத்திட்டத்தை ஏற்க, இம்மாநாடு தீர்மானித்தது. மேலும், 'மதுரை ஜில்லாவில் நீதிக்கட்சிப் பிரச்சாரகர்கள் நியமிக்க வேண்டும், மதுரை முழுவதும் கிளைகளைப் பரப்ப வேண்டும், கட்சிக்கு உரிய நிதி வசூல் செய்ய வேண்டும், காலம் தாழ்த்தாமல், கட்சிக்கு என ஒரு தினசரி பத்திரிகை தொடங்க வேண்டும், எதிர்வரும் தேர்தலில் நீதிக்கட்சி சார்பில், அனைத்து இடங்களிலும் வேட்பாளர்கள் நிறுத்த வேண்டும், நீதிக்கட்சியின் கொள்கைகளைத் தாங்கி வரும் 'ஜஸ்டிஸ்', 'விடுதலை', 'குடிஅரசு' இதழ்களை அனைவரும் ஆதரிக்க வேண்டும்' என நீதிக்கட்சியின் வளர்ச்சி குறித்தே பல தீர்மானங்கள் இருந்தன.

பின்னர் அ.பொன்னம்பலனார், பட்டுக் கோட்டை அழகிரி ஆகியோரின் உரைவீச்சுகள் 8 மணிவரை தொடர்ந்தன. நீதிக்கட்சிக்கான வேலைத்திட்டங்களும், அக்கட்சியின் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கும் தக்க பதிலடி தந்து உரையாற்றினார் பெரியார். இது ஜில்லா மாநாடுதான் என்றாலும், ஏற்பாடுகள் அனைத்தும் மாகாண மாநாட்டைப்போல இருந்தன. அன்று முழுவதும் வாடிப்பட்டி திருவிழாக்கோலமாகவே காட்சியளித்தது. இந்த ஜில்லா மாநாட்டை யொட்டி, எண்ணற்ற தாலுகா மாநாடுகளும் மதுரையில் ஏற்பாடு செய்யப்பட்டன.

...கூட்டம் திரளும்

## 'தி.மு.க. எனக்காகப் போராடும்!'

"நான் ஏன் தி.மு.கவை ஆதரிக்கிறேன்" என கந்தசாமி மாரியப்பன் என்பவர், முகநூலில் எழுதிய பதிவு கவனிக்க வைக்கிறது.

"ஒரு அரசியல் கட்சி ஆட்சிக்கு வருவது, அதுவும் இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட நாட்டில் உள்ள ஒரு மாநிலக் கட்சி ஆட்சிக்கு வருவது வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நலத் திட்டங்களையும் செயல்படுத்துவதற்காக மட்டுமே இல்லை. அந்த மாநிலத்தின் புவிப்பரப்பை, அந்த மாநிலத்தின் மொழியை, அந்த மாநிலத்தின் இன அடையாளத்தை, அந்த மாநிலத்தின் கலாச்சார அடையாளத்தைக் காப்பாற்ற போராடுகிற கட்சியாக இருக்க வேண்டியதும் கட்டாயம்.

கல்வி, அதிகாரம், பொருளாதார வாய்ப்பு அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்ய போராடுகிற கட்சியாக இருக்க வேண்டியது கட்டாயம். கல்வி, அதிகாரம், சமூக அரசியலில் பெண்களின் பங்களிப்பை உறுதிப்படுத்தும் கட்சியாக இருக்க வேண்டியது கட்டாயம். போராட்டத்தில் தோற்றுப்போகலாம். ஆனால், போராட்ட குணம் இருந்துகொண்டே இருக்க வேண்டும். உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டே இருக்க வேண்டும்.

சில சமரசங்கள் இருக்கலாம், ஆனால், போராட்டத்தை எப்போதுமே கைவிட்டு விடக் கூடாது. அந்தப் போராட்டங்களால்... மக்களுக்குத் தங்களுடைய இன, மொழி, கலாச்சார, உணவு, பொருளாதார உரிமையைப் பற்றிய புரிதல் இருந்து கொண்டே இருக்கும். இந்தியாவில், இந்தப் போராட்ட குணம் உள்ள கட்சி, தி.மு.க. மட்டுமே.

தனது மக்களுக்கான கல்வி, அரசு அதிகாரம், பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்த இயக்கம், திராவிட இயக்கம். தமிழ்நாட்டின், சமூக பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்திய கட்சி.

70-களில் பிற்போக்குவாத வலதுசாரிகளின் எதேச்சதிகாரத்திற்கு அடிபணியாமல் போராடி வென்ற கட்சி தி.மு.க. 2010-களில் பிற்போக்குவாத பா.ஜ.க.வின் மிரட்டலுக்கு அடிபணியாமல், தமிழ்நாட்டின் சுயமரியாதையை, தமிழ்மொழியின் பெருமையைக் காப்பாற்றும் கட்சி. தி.மு.க. ஒருபோதும் மக்களுக்கான அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடுக்கும் நிலைக்குச் சென்றதில்லை. எனவே, எனது தேர்வு எப்போதுமே எனக்காகப் போராடும் தி.மு.க. மட்டுமே. 'My choice in politics, always DMK which fight and protect my basic rights' என்கிறது அந்த பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### என் பிள்ளைகளுக்குக் கிடைத்த வாழ்நாள் வாய்ப்பு!



பி.சந்திரசேகரன்

2014-ஆம் ஆண்டு, பள்ளி விடுமுறை காலத்தில் சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு வந்தபோது, தமிழினத்தின் தலைவரை என் பிள்ளைகளுக்குக் காட்ட வேண்டுமென, அண்ணன் நெல்லிக்குப்பம் புகழேந்தி அவர்களின் உதவியுடன் கோபாலபுரம் சென்றிருந்தோம். தலைவரைப் பார்த்தவுடன் எனக்கு பேச்சு வரவில்லை. அவரோ என் மகளிடம் "பெயர் என்ன?" எனக் கேட்க, "தமிழ் இலக்கியா தாத்தா" என்றாள். பெயரைக் கேட்டவுடன், மீண்டும் இன்னொருமுறை கேட்டு, என் மகளுக்குக் கை கொடுத்தார். மகன் ஆதவன், "எப்படி இருக்கீங்க தாத்தா?" என்றும், "சாப்பிட்டீர்களா தாத்தா?" என்றும் கேள்விகள் கேட்டான். அதற்குத் தலைவர் "நான் சாப்பிடவில்லை, நீ சாப்பிட்டாயா" எனக் கேட்டு, "ஏன் நீ கொண்டு வரவில்லை?" என்றார். "தாத்தா, எனக்கு வழி தெரியாது யாரையாவது அனுப்பி வையுங்கள், அவர்களிடம் எங்கள் வீட்டில் இருந்து கொடுத்து அனுப்புகிறேன்" என்று அவன் சொன்னவுடன், கலகல என்று ஒரு சிரிப்பு தலைவரிடம் இருந்து வந்தது. எனக்கும், என் பிள்ளைகளுக்கும் கோடி ரூபாய் கொட்டிக்கொடுத்தாலும் கிடைக்காத வாழ்நாள் வாய்ப்பு.

- பி.சந்திரசேகரன்,
தி.மு.க. அயலக அணி துணை அமைப்பாளர், சிங்கப்பூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

101

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




# உடைபடும் மிகை மதிப்பீடுகள்!

இந்திய குடியரசு 76 ஆண்டுகளை நிறைவு செய்திருந்தாலும், முடியரசுகளின் மீதான வியப்பு ஆட்சியாளர்களுக்கும் அதன் குடிமக்களுக்கும் குறைந்தபாடில்லை. இரண்டு தரப்புமே தங்களது பெருமையையும் புகழையும் மன்னராட்சி விழுமியங்கள் மீது, முடிச்சிட்டுக் கொள்ள முயல்கின்றனர். புதிய நாடாளுமன்றக் கட்டடம் திறக்கப்பட்ட போது வழங்கப்பட்ட செங்கோல் முடியாட்சியின் எச்சம், அதைப் போலவே குடிவழிப் பெருமையை முன்னிறுத்துபவர்களிடையே, ராஜ பரம்பரையின் வழித் தோன்றல்களாகத் தங்களைப் பாவித்துக்கொள்ளும் போக்கு நிலவி வருவது கண்கூடு.

இந்த இரண்டு தரப்பினருக்குமே முடியாட்சியின் கீழ் அரசும் சமூகமும் எப்படி இயங்கின என்பது குறித்த விழிப் புணர்வு இல்லை. சோழர் கால வரலாற்றாய்வாளர் ஏ.சுப்பராயலு அவர்களின் சோழர்கள் குறித்த முதல் தமிழ்நூல் அண்மையில் வெளியாகி உள்ளது. 'சோழ அரசும் சமூகமும்' எனும் இந்நூலை, காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, நொபொரு காரசிமா ஆகியோரைத் தொடர்ந்து சோழர் கால வரலாற்றாய்வில் இவரது பங்களிப்பு முக்கியமானது.

அரசர்கள், போர்கள் இவற்றின் மிகை மதிப்பீடுகளைத் தாண்டி, சோழர் காலத்தில் சமூகமும் பொருளியலும் எப்படியான ஒன்றாக இருந்தது என்பதை, இந்நூல் பல்வேறு சான்றுகளுடன் விளக்குகிறது. இதுவரை யூகங்களாக இருந்து வந்த பல்வேறு விடயங்கள் குறித்த தெளிவை, இந்நூல் வழங்குகிறது.

சோழர் காலத்தில் நிர்வாகம், வரி வசூல் முறை, குடிமைச் சமூகம், வேளாண்மை, மக்கள் பண்பாடு, மக்கள் பெயர்கள், தொழிலாளர்களின் நிலை முதலானவற்றை ஆதாரப் பூர்வமாக எடுத்துக் கூறுகிறது இந்நூல்.

பொது ஆண்டு 900 வரை பல்லவர்கள் தொண்டை நாட்டை ஆண்ட நிலையில், அவர்களுக்குப் பிறகு சோழர்கள் ஆட்சியை வலுவாகப் பிடித்தனர். தொடர்ந்து, வடஇந்தியப் புராணத்து மரபுகளிலுள்ள புனைவுகளோடு தங்களை இணைத்துக் கொள்ள முற்பட்டனர். இதனை வலுப்படுத்துவதற்கு ஆழ்ந்த விருப்பத்துடன் பார்ப்பன குடியிருப்புகளை (பிரமதேயங்களை) உருவாக்கினர். சோழ மண்டலத்தில் மொத்தம் 2,300 ஊர்கள் இருந்ததாகவும், அவற்றுள் 20% பிரம்மதேயங்கள் எனவும் 70% வெள்ளான்வகை ஊர்கள் எனவும், வணிக ஊர்களான நகரங்கள் 5% எனவும், 3% தேவதான ஊர்கள் எனவும் இந்நூல் குறிப்பிடுகிறது. முடியாட்சியில் பார்ப்பனர்கள் அனுபவித்த சலுகைக்கு இதுவே சிறந்த சான்று.

மக்கள் தங்களது உழைப்பை வரியாக செலுத்த வேண்டியது முடியாட்சியில் கட்டாயமான ஒன்றாக இருந்துள்ளது. வரி செலுத்தாமல் இருப்பவர்கள் பல்வேறு தண்டனைகளுக்கு ஆட்படுத்தபட்டு, அடிமைகளாக நடத்தப்பட்டுள்ளனர். அதைப் போலவே நிலக்கிழார்கள், உழுகுடிகள், அடிமைகள் ஆகியோர் சோழ அரசின் கீழ் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பது குறித்த தெளிவை இந்த நூல் அளிக்கிறது.

சமத்துவமின்மையின் மொத்த வடிவமாக விளங்கிய சோழ அரசாட்சியின் கீழ், மக்கள் எவ்வாறு நடத்தப்பட்டனர், அவர்களின் அதிகாரம் என்னவாக இருந்தது ஆகியவற்றை அறிந்துகொள்ள, மிக முக்கிய ஆவணமாக இந்நூல் திகழும். மன்னராட்சியின் மீது உயரிய அபிப்ராயங்கள் கொண்ட அனைவரும் வாசிக்கவேண்டிய நூல்.

...வாசிப்போம்.

## நம் வரலாறு

### பேருந்துகள் நாட்டுடைமை!

1967-இல் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர், 120 கி.மீ-க்கு மேல் ஓடும் அனைத்துப் பேருந்துகளையும் நாட்டுடைமை ஆக்கினார். சென்னையில் இருந்து புறப்படும் மற்றும் சென்னைக்கு வரும் அனைத்துப் பேருந்துகளையும் நாட்டுடைமை ஆக்கினார். அதேபோல குமரி மாவட்டத்தின் அனைத்துப் பேருந்துகளையும் நாட்டுடைமை ஆக்கினார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.